# பாடம் 59: கிறிஸ்தவச் சாட்சியத்துக்கு அழைப்பு (மற்றச் சமயங்களின் மக்கள்)

**முந்திய பாடத்தில் இருந்து மீள்பார்வை:**

முந்திய பாடத்தில், ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதரியத் திருச்சபைக்குள் நாம் பெற்ற திருமுழுக்கின் பேற்றினால், ஒவ்வொரு கிறிஸ்தவரும் விசுவாசத்துக்கு சாட்சியம் பகர்கின்ற கடமையைக் கொண்டுள்ளார் என்பதை நாம் கற்றோம். இந்த பாடத்தில், திருமுழுக்கு பெறாத மக்களும் எவ்வாறு உண்மையில் திருச்சபையோடு தொடர்பு கொண்டுள்ளனர் என்பதைப் புரிந்துகொண்டு, அவர்களுக்கு நாம் எவ்வாறு கிறிஸ்தவ விசுவாசத்தின் சாட்சிகளாகத் திகழ முடியும் பற்றி நாம் கற்போம்.

**தற்போதைய பாடம்:**

1. ஆசியாவில் வாழ்வதில் எழுகின்ற சிக்கல்களில் ஒன்று ஆசிய மக்களின் சமயங்களில் இருந்து துளிர்க்கிறது. இன்றைய உலகில் செழித்துள்ள உலகச் சமயங்களின் ஆதாரமாக ஆசியக் கண்டம் இருக்கிறது: கிறிஸ்தவம், இஸ்லாம், இந்துவியம், பவுத்தம், தாவோயியம், மேலும் பல சமயங்கள். இதன் காரணமாக, பல கத்தோலிக்கர் நடுவே எழுகின்ற பொதுவான ஒரு கேள்வியாக திருமுழுக்கு பெறாத மக்கள் (அதாவது, பிற சமய நம்பிக்கையாளர்கள் அல்லது கடவுளில் நம்பிக்கை இல்லாதவர்கள்) மீட்கப்பட முடியுமா என்பதாக இருக்கிறது. கத்தோலிக்க திருச்சபை மீட்பு குறித்த தனது கோட்பாட்டை அண்மைய ஆண்டுகளில் (இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் இருந்து) மாற்றிக் கொண்டுள்ளதாக சில கத்தோலிக்கர் தவறாக நினைக்கின்றனர்.

2. மற்றச் சமயங்களின் மக்கள் குறித்து கிறிஸ்தவர்கள் நடுவே பொதுவாக இரண்டு கருத்துகள் உள்ளன:

அ) *கிறிஸ்தவர்கள் மட்டுமே மீட்படைவர்.* கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவர்கள் உங்கள் நண்பர்களாக இருந்தால், கிறிஸ்தவர்கள் மட்டுமே மீட்படைய முடியும் என்று சொல்வதைக் கேட்டிருக்க வாய்ப்புள்ளது, அதாவது ஒரு நபர் ‘‘இயேசு கிறிஸ்துவைத் தனிப்பட்ட விதத்தில் ஆண்டவராகவும் மீட்பராகவும் ஏற்காத’’ வரையிலும் அவர் தண்டனைத் தீர்ப்புக்குரியவர். இது பிரிந்த கிறிஸ்தவர்கள் நடுவே காணப்படும் கருத்தாக இருக்கிறது. இப்பார்வை விலக்குவாதம் என்று அழைக்கப்படுகிறது.

ஆ) *சமயச் சார்பின்றி அனைவரும் மீட்படைவர்.* மற்றொரு பொதுவான நிலைப்பாடு, வினோதமாக, உலகின் இந்த பகுதியில் உள்ள கிறிஸ்தவர்கள் நடுவே காணப்படுவதாகத் தெரிகின்றது. இது எல்லா சமயங்களும் மீட்புக்கு இட்டுச் செல்கின்றன, அதாவது எந்த ஒரு சமயமும் மற்றவற்றை விடச் சிறந்ததன்று என்னும் நிலைப்பாடாக இருக்கிறது. இப்பார்வை பன்மைவாதம் என்று அழைக்கப்படுகிறது. இந்த கருத்தை, உண்மையில், கத்தோலிக்க திருச்சபை ஏற்பதில்லை. எல்லா சமயங்களும் மீட்புக்கு இட்டுச் செல்லும் என்றால், உலகின்

பாவங்களுக்காகத் தாம் இறக்க வேண்டும் என்று நினைத்த இயேசு கிறிஸ்து மடத்தனம் அல்லது அறியாமை கொண்ட மனிதராக இருந்திருக்க வேண்டும். இன்னுமதிகமாக, எல்லா சமயங்களும் கூறும் உண்மை சமமானதாக இருந்தால், இந்த சமயங்கள் முரண்பாடான படிப்பினைகளையும் கூற்றுகளையும் கொண்டுள்ளதில் ஏரணம் இருக்கிறதாகத் தோன்றவில்லை. நம்பிக்கைகள் ஒன்று மற்றதோடு முரண்படுகிறது என்றால், அவை எல்லாம் உண்மையாக இருக்க முடியாது. இரண்டு சமயங்களின் கூற்றுகள் முரண்பட்டால், ஒன்று சரியாகவும் மற்றது தவறாகவும் இருக்க வேண்டும்.

மேற்கண்ட இரண்டு நிலைப்பாடுகளையும் கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக் கொள்ளவில்லை. திருச்சபையின் நிலைப்பாடானது விலக்குவாதமாகவோ பன்மைவாதமாகவோ இல்லை. மாறாக, அது உள்ளடக்குவாதமாக இருக்கிறது, அது உலகின் பாவங்களுக்காகத் தமது உயிரைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவின் தனித்துவத்தை சமரசம் செய்யாமல், நம் அடுத்துள்ளோருக்கு கடவுளின் அருளையும் அன்பையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

3. இரண்டாம் வத்திக்கான் சங்கம் போதிக்கிறதாவது, கடவுளின் மீட்புத் திட்டம் எல்லா மக்களையும் உள்ளடக்கியது: யூதர்கள், முஸ்லிம்கள், மற்றும் கிறிஸ்தவமல்லாத மற்றச் சமயங்களையும் கூட.

*உரையாடலும் அறிவித்தலும்*, 15: ‘‘புதிய ஆதாமான கிறிஸ்து, தமது உடலேற்பு, இறப்பு மற்றும் உயிர்ப்பின் மறைபொருள் வழியாக, ஒவ்வொரு மனிதரிலும் உள்ளார்ந்த புதுப்பித்தலைக் கொணரச் செயலாற்றுகிறார்.

*கவ்தியும் எத் ஸ்பெஸ்*, 22: ‘‘இது கொண்டுள்ள உண்மை கிறிஸ்தவர்களுக்கு மட்டுமானது அன்று, கட்புலனாகாத வகையில் அருள் செயல்படுகின்ற நல்ல எண்ணம் கொண்ட எல்லா மக்களுக்குமானது. கிறிஸ்து எல்லாருக்காகவும் இறந்ததாலும், எல்லாரும் உண்மையில் இறையாக இருக்கின்ற ஒரே, அதே இறுதிநிலைக்கு அழைக்கப்பட்டுள்ளதாலும், கடவுளை அறிவதற்கான வழியிலும், பாஸ்கா மறைபொருளிலும் கூட்டாளர்கள் ஆக்குவதற்கான எல்லா சாத்தியத்தையும் தூய ஆவியார் வழங்குகிறார் என்று நாம் கொள்ள வேண்டும்.’’

4. திருச்சபை அதிகப்படியாகச் சென்று ‘‘இன்னும் நற்செய்தியைப் பெறாத’’ இவர்கள் எல்லாரும் ‘‘இறைமக்களோடு பல்வேறு விதங்களில் தொடர்பில் இருக்கின்றனர்’’ என்கிறது (கதிம 839). கதிம 839 முதல் 842 வரை (மற்றும் *லூமன் ஜென்சியும்*, 26ல்), இந்த உறவுநிலைகள் ஒவ்வொன்றின் தனித்துவமான இயல்பு பற்றி கூடுதல் விளக்கம் தரப்படுகிறது. மேலும் கதிம 843ல், இந்த சமயங்கள் கடவுளுக்கான மனிதரின் தேடலின் அடையாளமாக இருக்கிறதைக் கண்டுணர்வதாகத் திருச்சபை கூறுகிறது.

*கதிம 839*: “இன்னும் நற்செய்தியைப் பெறாதோரும் இறைமக்களோடு பல்வேறு விதங்களில் தொடர்பில் இருக்கின்றனர்.”

“*யூத மக்களுடனான திருச்சபையின் உறவுநிலை.* புதிய உடன்படிக்கையின் இறைமக்களது திருச்சபையாள் தனது மறைபொருளுக்குள் ஆழ்கின்ற பொழுது, ‘கடவுளின் வார்த்தையை முதலில் கேட்ட’ யூத மக்களுடனான தனது தொடர்பை கண்டறிகிறாள். யூத விசுவாசம், மற்ற கிறிஸ்தவம் அல்லாதச் சமயங்களைப் போலன்றி, ஏற்கெனவே பழைய உடன்படிக்கையில் கடவுளின் வெளிப்பாட்டுக்கு ஒரு பதிலிறுப்பாக இருக்கிறது. யூதர்கள் ‘மகன்மை, மாட்சி, உடன்படிக்கைகள், சட்டம் வழங்கல், வழிபாடு, மற்றும் வாக்குறுதிகள்’ உரித்தாகியுள்ளன; ‘அவர்களது குலமுதுவர்கள், மற்றும் அவர்களின் இனத்தைச் சார்ந்தவராக, உடல் சார்ந்த முறையில் கிறிஸ்து இருக்கிறார்’, ‘கடவுளின் கொடைகளும் அழைப்பும் மாற்றவியலாதவை.’”

*கதிம 840*: “ஒருவர் எதிர்காலத்தைக் கருதும் பொழுது, பழைய உடன்படிக்கையின் இறை மக்களும் புதிய இறைமக்களும் ஒத்த இலக்குகளை நோக்கிச் செல்கின்றனர்: மெசியாவின் வருகை (அல்லது திரும்புதல்) குறித்த எதிர்பார்ப்பு. ஆனால் இறந்து உயிர்த்தெழுந்து ஆண்டவராகவும் இறைமகனாகவும் அறியப்பட்ட மெசியாவின் திரும்புதலுக்காக ஒருதரப்பினர் காத்திருக்கின்றனர். மறுதரப்பினர் காலத்தின் முடிவு வரை மறைந்திருக்கும் பண்புநலன் கொண்ட மெசியாவின் வருகைக்காகக் காத்திருக்கின்றனர்; இந்த இரண்டாவது காத்திருப்பு கிறிஸ்து இயேசுவை அறியாத அல்லது தவறானப் புரிதலோடு இணைந்திருக்கிறது.”

*கதிம 841*: “*முஸ்லிம்களுடனான திருச்சபையின் உறவுநிலை.* மீட்புத் திட்டமானது படைப்பாளரை ஒப்புக்கொள்வோரையும் உள்ளடக்கியதாக இருக்கிறது, அவர்களில் முதல் இடத்தில் இருக்கிறவர்கள் முஸ்லிம்கள்; ஆபிரகாமின் விசுவாசத்தை அறிக்கையிடுகின்ற இவர்கள், நம்மோடு ஒருசேர ஒரே, இரக்கமுள்ள கடவுளை, இறுதிநாளில் மனிதகுலத்துக்குத் தீர்ப்பிடுகிறவரை ஆராதிக்கின்றனர்.”

*கதிம 842*: “*கிறிஸ்தவர் அல்லாதோருடனான திருச்சபையின் பிணைப்பில்* மனித இனத்தின் பொது தொடக்கமும் முடிவும் முதலிடம் பெறுகின்றன: எல்லா மக்களினங்களும் ஒரே குழுமமாக இருக்கின்றன. இது ஏனெனில் முழு உலகத்திலும் கடவுள் படைத்த மக்கள் ஒரே இருப்பில் இருந்தே தளிர்க்கின்றனர், எல்லாரும் கடவுள் என்ற ஒரு பொது முடிவையே பகிர்கின்றனர். அவரது பராமரிப்பு, நன்மைத்தனத்தின் சான்று, மற்றும் மீட்பின் வடிவமைப்புகள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டோர் தூய நகரில் ஒன்றுகூடும் நாள் வரை விரிவடைகிறது...”

*கதிம 843*: “வாழ்வும் உயிர்மூச்சும் எல்லா பொருட்களையும் வழங்குகிற, எல்லா மனிதரும் மீட்கப்பட விரும்புகின்ற, அருகில் இருந்தும் அறியப்படாத கடவுளை, நிழல்கள் மற்றும் உருவங்களின் நடுவே தேடுகின்ற மற்றச் சமயங்களில் கத்தோலிக்க திருச்சபை

கண்டுணர்கிறது. இவ்வாறு, இந்த சமயங்களில் காணப்படும் எல்லா நன்மைத்தனமும் உண்மையும் ‘‘நற்செய்திக்கான ஒரு தயாரிப்பு...’’ என்று திருச்சபை கருதுகிறது.’’

5. எல்லா சமயங்களும் சமம் அல்லது எல்லா சமயங்களும் மீட்பைக் கொணர்கின்றன என்று திருச்சபை கூறவில்லை என்பதை கவனியுங்கள். உண்மையில், கத்தோலிக்க மறைக்கல்வி எப்படி ‘‘மனிதர் (பிற சமய மக்கள்) தங்கள் சமய நடத்தையில்... கடவுளின் உருவத்தைச் சிதைக்கின்ற வரம்புகளையும் வழுக்களையும் காட்டுகின்றனர்’’ என்றும் பேசுகிறது (கதிம 844). இது நற்செய்தி பரப்பலின் அவசியத்தைச் சுட்டுகிறது.

மற்றச் சமயங்களில் உண்மைகளும் விழுமியங்களும் இருக்கின்றன என்பதை மறுக்காமல், இந்த் உண்மைகளும் விழுமியங்களும் தீவிர வழுக்களோடு கலந்திருக்கின்றன, அந்த உண்மைகள் கொண்டுள்ள மீட்புக்கான விழுமியங்கள், கிறிஸ்தவ நற்செய்திக்குத் தயாரிக்கும், அல்லது அவற்றைப் பிரதிபலிக்கும் அளவுக்கு மட்டுமே இருக்கின்றன என்பதைத் திருச்சபை கற்பிக்கிறது (*லூமன் ஜென்சியும்*, 16). மற்ற வார்த்தைகளில், கடவுளின் மீட்புத் திட்டம் மற்ற சமய மக்களையும் உள்ளடக்கியதாக இருந்தாலும், (இயேசு கிறிஸ்துவின் மீட்கும் ஆற்றலை நம்பாத) இந்த சமயங்கள் தம்மிலேயே மனிதகுலத்தை மீட்கும் ஆற்றல் இல்லாதவை.

6. இயேசுவினுடையதைத் தவிர வேறெந்த பெயராலும் மீட்படைய முடியாது என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கற்பிக்கிறது (திப 4:12; *அத் ஜென்தெஸ்*, 9; *கவ்தியும் எத் ஸ்பெஸ்*, 10). உறுதியான மொழியில் அது அறிவிக்கிறது: ‘‘இந்த புனித மன்றம் தனது நம்பிக்கையை அறிக்கையிடுகிறது, அதாவது கடவுள் தமக்கு மனிதர்கள் பணிவிடை புரிகின்ற விதத்தை மனிதகுலம் அறியச் செய்தார், இவ்வாறு கிறிஸ்துவில் மீட்படைந்து பேறுநிறை நிலைக்குள் வருகின்றனர்’’ (*டிக்னிடாட்டிஸ் ஹூமனாய்*, 1).

7. விசுவாசமும் திருமுழுக்கும் மீட்புக்கு அவசியமானவை (மாற் 16:16, யோவா 3:5), மேலும், திருமுழுக்கு திருச்சபையின் கதவாக இருக்கிறதால், திருச்சபையும் அவசியமாக இருக்கிறது. திருச்சபை அவசியம் என்பதை அறிந்திருக்கிற எவரும், மீட்புக்கான ஒரு நிபந்தனையாக அதில் நுழைந்து, அதில் தொடர்ந்திருக்க கடமை கொண்டுள்ளார் (*லூமன் ஜென்சியும்*, 14).

*கதிம 845*: ‘‘சிதறுண்ட மற்றும் பாவத்தால் அழிவுக்கு இட்டுச் செல்லப்படுகிற, தமது எல்லா பிள்ளைகளையும் மீளொன்றிக்கச் செய்ய, தந்தையானவர் முழு மனிதகுலத்தையும் ஒருசேர தமது மகனின் திருச்சபைக்குள் அழைக்க விரும்பினார். மனிதகுலம் தனது ஒருமையையும் மீட்பையும் மீள்கண்டுபிடிப்பு செய்யும் இடமாகத் திருச்சபை இருக்கிறது. திருச்சபை என்பது ‘ஒப்புரவான உலகமாக’ இருக்கிறது. அது ‘ஆண்டவரது சிலுவையின் முழுத் துடுப்பிடலில், தூய ஆவியாரின் உயிர்மூச்சால், இந்த உலகில் பாதுகாப்பாகப் பயணிக்கிறது’. திருச்சபை தந்தையருக்கு விருப்பமான மற்றொரு உருவகத்தின்படி, நோவாவின் பேழையால் திருச்சபை முன்னுருவகிக்கப் பெற்றுள்ளது, அது மட்டுமே வெள்ளத்தில் இருந்து காப்பாற்றுகிறது.’’

*கதிம 846*: "'திருச்சபைக்கு வெளியே மீட்பு இல்லை.' நாம் இதை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டுமென, திருச்சபை தந்தையரால் திரும்பத்திரும்பக் கூறப்படுகிறது? நேர்மறையாக மறுவுருவாக்கம் செய்தால், அதன் பொருள் தலையாகிய கிறிஸ்துவிடம் இருந்து வருகின்ற மீட்பு எல்லாம் அவரது உடலாகியத் திருச்சபை வழியாகவே வருகிறது: மறைநூல் மற்றும் மரபில் தன்னை ஊன்றி, சங்கம் போதிக்கிறது என்னவெனில் மண்ணகத் திருப்பயணத்தில் இருக்கின்றத் திருச்சபைக்கு மீட்பு அவசியம்: ஒரே கிறிஸ்துவே இடையாளராகவும் மீட்பின் வழியாகவும் இருக்கிறார்; அவர் தமது உடலாகியத் திருச்சபையில் நமக்கு வழங்கப்படுகிறார். அவர் தாமே விசுவாசம் மற்றும் திருமுழுக்கின் அவசியத்தை வெளிப்படையாக உறுதி செய்துள்ளார், மேலும் அவ்விதமே மனிதர் ஒரு கதவைப் போன்று திருமுழுக்கு வழியாக நுழைகின்றத் திருச்சபையின் அவசியத்தையும் உறுதிப்படுத்தியுள்ளார். ஆகவே கடவுளால் கிறிஸ்து வழியாக நிறுவப்பட்ட கத்தோலிக்க திருச்சபையின் அறிந்தவர்கள், அதற்குள் நுழைய அல்லது தொடர்ந்து இருக்க மறுத்தால், அவர்கள் மீட்படைய முடியாது."

*கதிம 1257*: "ஆண்டவர் தாமே மீட்புக்கு திருமுழுக்கு அவசியம் என உறுதிப்படுத்தியுள்ளார். எல்லா மக்களினத்தாருக்கும் நற்செய்தி அறிவிக்கவும், அவர்களுக்கு திருமுழுக்கு வழங்கவும் அவர் தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டுள்ளார். நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளோர் மற்றும் இந்த அருளடையாளத்தைக் கேட்கச் சாத்தியமுள்ளோரின் மீட்புக்கு திருமுழுக்கு அவசியம். நித்தியப் பேறுநிலையை உறுதிப்படுத்த திருமுழுக்கைத் தவிர வேறெந்த வழியையும் திருச்சபை அறியவில்லை; இதன் காரணமாகவே, திருமுழுக்கு பெற முடிந்த எல்லாரும் 'தண்ணீராலும் ஆவியாராலும் மறுபிறப்பு அடைவதை'க் காண ஆண்டவரிடம் இருந்து பெற்ற எய்துபணியைப் புறக்கணிக்காமல் அக்கறையுடன் இருக்கிறது. *கடவுள் மீட்பைத் திருமுழுக்கு அருளடையாளத்துடன் பிணைத்துள்ளார், ஆனால் அவர் தாமே தமது அருளடையாளங்களுடன் பிணைந்திருக்கவில்லை.*"

*கதிம 1277*: "திருமுழுக்கு என்பது கிறிஸ்துவில் புது வாழ்வுக்குள் பிறப்பதாகும். ஆண்டவரின் விருப்பப்படி, திருமுழுக்கு வழியாக நாம் நுழைகின்ற திருச்சபையைப் போன்றே, மீட்புக்கு அது அவசியமாக இருக்கிறது."

8. எனினும், நற்செய்தியைக் கேட்க வாய்ப்பு இல்லாத நபர்கள் மீட்பை இழந்துவிடுவார்களா என்றக் கேள்வியை இரண்டாம் வத்திக்கான் சங்கம் எதிர்கொண்டது. கடவுளது அருளின் உதவியோடு, தாங்கள் அறிந்த விதத்தில் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற அவர்கள் நிலையாக முயன்றால், அவர்கள் "பாஸ்கா மறைபொருளோடு தொடர்பு கொண்டுள்ளனர்" என்று அது பதிலளித்தது (*கவ்தியும் எத் ஸ்பெஸ்*, 22).

*கதிம 847*: "இந்த உறுதிப்பாடு, தங்கள் சொந்த தவறு வழியாக அன்றி, கிறிஸ்துவையும் அவரது திருச்சபையையும் அறியாதவர்களை நோக்கியதன்று: தங்கள் சொந்த தவறு வழியாக

அன்றி, கிறிஸ்துவின் நற்செய்தியை அல்லது அவரது திருச்சபையை அறியாதவர்கள், ஆனால் கடவுளை உண்மையுள்ள இதயத்தோடு தேடி, அருளால் நகர்த்தப்பட்டு, தங்களது மனச்சான்றின் அறிவுறுத்தல் வழியாக தாங்கள் அறிந்த அவரது விருப்பத்தை தங்களது செயல்களில் முயற்சிக்கிறவர்கள் -- இவர்களும் நித்திய மீட்பை அடையலாம்.''

9. ஆனால் திருச்சபைக்கு வெளியிலுள்ள மக்கள் அடிக்கடி பாவத்திலும் வழுவிலும் விழுகிற காரணத்தால், நற்செய்தியும் திருச்சபையும் அவர்களின் மீட்புக்கான வழியில் அவர்களுக்கு பெரிதாக உதவ முடியும் (*லூமன் ஜென்சியும்*, 16). இதன் காரணமாக, கத்தோலிக்க திருச்சபையின் உறுப்பினர்கள் எல்லாரும் நற்செய்தி பரப்பலின் புனித அலுவலைத் தொடர வேண்டும்.

*கதிம 848*: ''தங்கள் சொந்த தவறு வழியாக அன்றி, நற்செய்தியை அறியாதவர்களை, தாம் அறிந்த வழிகளில் அந்த விசுவாசத்திற்கு கடவுள் நடத்த முடியும் என்றாலும், அது இன்றி அவரை மகிழ்விப்பது சாத்தியமற்றது, எல்லா மனிதரிடமும் நற்செய்தி பரப்பும் கடமையையும் புனித உரிமையையும் திருச்சபை இன்னும் கொண்டுள்ளது.''

10. சுருக்கமாக, தூய கத்தோலிக்க திருச்சபை எல்லா சமயங்களிலும் காணப்படும் நன்மைத்தனம் மற்றும் தங்கள் திறன்களுக்கு ஏற்ப கடவுளைத் தேடுவோரின் மீட்புக்கானச் சாத்தியத்தை ஒப்புக்கொள்கிறது. எனினும், அதே மூச்சில், உலக மீட்புக்கான கிறிஸ்துவின் பணியின் பயனையும் அது உறுதிபடுத்துகிறது. மற்ற வார்த்தைகளில், தங்கள் சமயச் சார்பைத் தாண்டி, மக்கள் மீட்படைகின்றனர் என்றால், கிறிஸ்துவே அவர்களை மீட்கிறார் என்று நாம் நம்புகிறோம். மற்றச் சமயங்கள் கிறிஸ்துவின் நற்செய்திக்கான ஒரு தயாரிப்பாக இருக்கின்றன; அவை தாமே நற்செய்தியாக இருக்கிறதில்லை.

11. இந்நாட்களில், இந்த விடயத்தில் திருச்சபையின் படிப்பினை குறித்தத் தங்களது புரிதலில் குழப்பமுறும் கத்தோலிக்கர்கள் இருக்கின்றனர். இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியால் உலகில் நற்செய்தி பரப்புவதற்குப் பதிலாக, சிலர் மற்றச் சமயங்களின் மறைநூல்கள் மற்றும் பழக்கங்கள் பால் திரும்புகின்றனர். கிறிஸ்துவில் தாங்கள் தழுவியுள்ள நற்செய்திக்காக உறுதியாக நிற்பதற்குப் பதிலாக, பலரும் மற்ற சமயச் சடங்குகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். கிறிஸ்தவ மறைநூல் மற்றும் கிறிஸ்தவப் புனிதர்களின் வார்த்தைகளை விட மற்றச் சமயங்களின் நாயகர்கள் மற்றும் போதகர்களின் வார்த்தைகளைச் சுட்டிக் காட்டுவதில் சில கத்தோலிக்கர்களும் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகின்றது, இது தங்கள் கத்தோலிக்க நம்பிக்கையில் மற்றச் சமயப் போதகர்கள் அந்த இடத்தைப் பிடித்தது போன்று இருக்கிறது. இது வாய்ப்புக்கேடாக, உண்மை கடவுளுக்கானத் தங்கள் அர்ப்பணத்தில் ஒரு பாவம்நிறை சமரசமாக இருக்கிறது. ஒரே, தூய, கத்தோலிக்க, திருத்தூதரிய திருச்சபையில் காணப்படும் மனிதகுலத்தின் மீட்புக்கு அவசியமான இறை வெளிப்பாட்டு உண்மையின் முழுமையை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

12. மற்றச் சமயங்களின் மக்களிடம் (எந்த சமயத்தையும் ஏற்காதோரிடமும்) நாம் நற்செய்தி பரப்புவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன என்று தூய கத்தோலிக்க திருச்சபை கூறுகிறது. *உரையாடல் மற்றும் அறிவித்தலே* இந்த இரண்டு வழிகள்.

அறிவித்தல் என்பது "நற்செய்தியின் செய்தியை, கடவுளால் இயேசு கிறிஸ்துவில் ஆவியாரின் வல்லமையால் கண்டுணரப்பட்ட மீட்பின் மறைபொருளைத் தொடர்பு கொள்வதாகும். இது இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொள்வதற்கான அர்ப்பணம் மற்றும் திருமுழுக்கு வழியாகத் திருச்சபை என்ற நம்பிக்கையாளர்களின் குழுமத்திற்குள் நுழைவதற்கான ஓர் அழைப்பாக இருக்கிறது" (*உரையாடலும் அறிவித்தலும்*, 10).

உரையாடல் என்பது "உண்மைக்குக் கீழ்ப்படிந்தும் சுதந்திரத்திற்கு மதிப்பளித்தும் 'ஊடிடைப் புரிதல் மற்றும் வளப்படுத்தலை நோக்கியதாக மற்றச் சமயங்களின் தனிநபர்கள் மற்றும் குழுமங்களுடன் எல்லா நேர்மறையான மற்றும் ஆக்கப்பூர்வமான சமயங்களிடை உறவுகளை ஏற்படுத்துவதைக் குறிக்கிறது. இது சாட்சியத்தையும் தொடர்புடைய சமயத் தீர்ப்பிடல்களைத் தேடியறிதலையும் உள்ளடக்கியது" (*உரையாடலும் அறிவித்தலும்*, 9).

13. வெளிப்படையாக, அறிவித்தல் என்பது உரையாடலை விட மிக நேர்முகச் செயலாக இருக்கிறது. இன்னும், நமது நற்செய்தி பரப்பலின் ஒருங்கிணைந்த பகுதியாக உரையாடல் இருக்கிறதைத் திருச்சபை பொருத்தமானதாகக் கருதுகிறது, ஏனெனில் நாம் உரையாடுகின்ற கடவுளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்.

*உரையாடலும் அறிவித்தலும்*, 38: "கடவுள், ஒரு நீண்டகால உரையாடலில், மனிதகுலத்திற்கு மீட்பு வழங்கியுள்ளார், மேலும் தொடர்ந்து வழங்கி வருகிறார். இறை முயற்சிக்கான நம்பகத் தன்மையில், எல்லா ஆண்கள் மற்றும் பெண்களுடனான உரையாடலில் திருச்சபையும் நுழைய வேண்டும்."

14. திருச்சபை எவ்வித குறிப்பிட்ட முன்னுரிமையும் இன்றி சமயங்களிடை உரையாடலின் நான்கு வேறுபட்ட வடிவங்கள் குறித்து பேசுகிறது (*உரையாடலும் அறிவித்தலும்*, 42):

அ) *வாழ்வின் உரையாடல்*, இங்கு மக்கள் திறந்த மற்றும் அடுத்திருக்கும் உணர்வோடு, தங்கள் இன்பங்களையும் துன்பங்களையும், மனிதப் பிரச்சனைகள் மற்றும் முன்னீடுபாடுகளைப் பகிர்ந்து வாழ்வதற்கு முயற்சிக்கின்றனர்.
ஆ) *செயலின் உரையாடல்*, இதில் கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் மக்களின் விடுதலைக்காக உடனுழைக்கின்றனர்.
இ) *இறையியல் பறிமாற்றத்தின் உரையாடல்*, இங்கு வல்லுநர்கள் குறிப்பிட்ட சமய மரபுகள் குறித்த தங்கள் புரிதலை ஆழப்படுத்தவும், ஒருவர் மற்றவருடைய ஆன்மிக விழுமியங்களைப் பாராட்டவும் நாடுகின்றனர்.

ஈ) *சமய அனுபவத்தின் உரையாடல்*, இங்கு தங்கள் சொந்த சமய மரபுகளில் வேரூன்றிய நபர்கள், செபம் மற்றும் தியானம், விசுவாசம் மற்றும் கடவுளைத் தேடும் வழிகள் தொடர்பான தங்கள் ஆன்மிக வளங்களைப் பகிர்கின்றனர்.

15. உரையாடல் என்பது உண்மையில் திருச்சபையின் நற்செய்தி பரப்பும் எய்துபணியில் ஒருகிணைந்த பகுதியாக இருக்கிறது. ஆனால், ‘‘அறிவித்தலானது நற்செய்தி பரப்பலின் அடித்தளம், மையம், மற்றும் உச்சமாக இருக்கிறது’’ என்பதையும் நாம் மறக்கக்கூடாது (*எவாஞ்செலீ நுந்தியாந்தி*, 27). கூடுதலாக இதற்குள் செல்வதெனில், எல்லா சமயங்களும் வெளிப்பாட்டிலும் உண்மையிலும் சமமாக இருந்தால், ‘‘நற்செய்தி பரப்பலின் அடித்தளம், மையம், மற்றும் உச்சமாக’’ அறிவித்தலுக்கு திருச்சபை முக்கியத்துவம் கொடுத்திருக்காது என்று நாம் உணரலாம். ஒருவர் மற்றவர் பற்றிக் கற்க, புரிந்துகொள்ள மற்றும் மதிக்க நாம் உரையாடவும் பகிரவும் செய்யலாம். ஆனால் இறுதியாக, உண்மை பேசப்பட வேண்டும், மேலும் எல்லா உரையாடலும் உண்மைக்கானத் தொண்டாக இருக்க வேண்டும். உரையாடல் அறிவித்தலாக மாறுகின்ற ஒரு புள்ளி அங்கு இருக்க வேண்டும்.

16. அதே நேரத்தில், மனித நபரின் சமய உணர்வு மதிக்கப்பட வேண்டும், அதாவது ‘‘எவரும் தமது மனச்சான்றுக்கு எதிராகச் செயல்படாமலும், சிறப்பாக சமயம் சார்ந்த விடயங்களில் தமது மனச்சான்றுக்கு ஏற்ப செயல்படுவது தடுக்கப்படாமலும் கட்டுப்பாடாக இருக்க வேண்டும் (*டிக்னிடாட்டிஸ் ஹூமனாய்*, 3). திருச்சபையின் நற்செய்தி பரப்பல் முயற்சிகளில், தன்னார்வ அருள் மற்றும் விருப்ப மனந்திரும்பலை உரையாடல் உறுதி செய்கிறது.

17. இந்த முழு விவாதத்தில் இருந்து, திருமுழுக்கு பெறாத மக்களைக் கண்டிக்கும் அவசியம் இல்லை என்பது தெளிவாகிறது. இன்னும், தூய திருச்சபைத் தாய் தொடர்ந்து நம் அருகிலுள்ள கத்தோலிக்கர் அல்லாதோரை உரையாடலுக்குத் தொடர்ந்து அழைக்கிறது, இறதியாக இயேசு கிறிஸ்துவின் உண்மையை அவர்கள் நடுவே அறிவிக்கிறது.